செ.வெ.எண்-17 நாள்-11.07.2019

**அரியலூர் மாவட்டத்தில் அம்மா திட்ட முகாம்கள் 12.07.2019 அன்று நடைபெறுகிறது.**

அரியலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும் ஏழாவது கட்டமாக **அரியலூர் மற்றும் உடையார்பாளையம் வட்டங்களில்,** வட்டத்திற்கு இரண்டு கிராமத்திலும், **செந்துறை** மற்றும் **ஆண்டிமடம்** வட்டத்தில் ஒரு கிராமத்திலும் அம்மா திட்ட முகாம் **12.07.2019** அன்று வட்டாட்சியர்கள் தலைமையில் பின்வருமாறு நடைபெற உள்ளது.

**அரியலூர் வட்டத்தில்** கோவில்எசனை (கிழக்கு), ஆலந்துறையார் கட்டளை ஆகிய கிராமங்களிலும், **உடையார்பாளையம் வட்டத்தில்** அணைக்குடம், தர்மசமுத்திரம் ஆகிய கிராமங்களிலும், **செந்துறை வட்டத்தில்** பெரியாக்குறிச்சி கிராமத்திலும், **ஆண்டிமடம் வட்டத்தில்** அணிக்குதிச்சான் (தெற்கு) கிராமத்திலும் நடைபெறுகிறது.

இம்முகாமில் வருவாய்த்துறையின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ் ஆகியவற்றில் தகுதி பெற்ற மனுக்களின் மீது உடனடியாக தீர்வு வழங்கப்படும்.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**